

காங்கேயம் சட்டமன்ற தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சென்னிமலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் "உதயசூரியன்" சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் பேரூர் கழக செயலாளர் ராமசாமி உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி மாங்காடு ஊராட்சி மழவராயன்குடியிருப்பு பகுதியில் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். நிகழ்வில் கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணைச் செயலாளர் , ஆலங்குடி தொகுதி பார்வையாளர் எழில்மாறன் செல்வேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, கழக வேட்பாளர் இரா.ஜெயராமகிருஷ்ணனுக்கு ஆதரவாக திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி மடத்துக்குளம் நால் ரோட்டில் பிரச்சாரத்தை நிறைவு செய்தார். இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பர்கூர் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளருமான டி. மதியழகன் எம்.எல்.ஏ, பர்கூர் பேருந்து நிலையத்தில் இறுதிக்கட்ட தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்போது திரளான பொதுமக்கள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் பேசிய அவர், தமிழகத்தில் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைவது உறுதி என்றும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திட்டங்களே மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.பர்கூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற இந்த பிரச்சாரத்தின் போது, . "தமிழகத்தை மீண்டும் ஆளப்போவது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தான்" என்று மதியழகன் பேசியபோது, தொண்டர்களின் கரகோஷம் விண்ணைப் பிளந்தது. இந்த பிரச்சாரத்தில் திமுக கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின், தி.மு.கழக வேட்பாளர் ந.தினேஷ்குமார் காங்கேயம் சாலை சி.டி.சி கார்னரில் தனது பிரச்சாரத்தை நிறைவு செய்தார். இதில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மன்னார்குடி சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பி ராஜா நகரப்பகுதிகளில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது முன்னாள் அமைச்சரும் கழக மூத்த நிர்வாகியுமான மன்னை பா. நாராயணசாமி அவர்களின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நகர்மன்ற தலைவர் மன்னை த. சோழராஜன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



கோபி சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் என்.நல்லசிவத்தை ஆதரித்து வெள்ளாளபாளையத்தில் திருமதி மரகதம் நல்லசிவம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ. திருவேங்கடம், ஒன்றிய செயலாளர் சீனிவாசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு. ஜெயக்குமாருக்கு ஆதரவாக திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி உடுமலைப்பேட்டையில் பிரச்சாரத்தை நிறைவு செய்தார். இதில் கழக இளைஞர் அணி துணை செயலாளர் இன்பா ரகு, கழகத் தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர், தொகுதி பார்வையாளர் தமிழ்மறை, நகர கழக செயலாளர் செ.வேலுச்சாமி, ஒன்றிய கழக செயலாளர் எஸ்.கே.எம்.தங்கராஜ் உள்பட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திண்டிவனம் (துனி) தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வி.சி.க. வேட்பாளர் வன்னி அரசுக்கு பானை சின்னத்திற்கு திண்டிவனம் நகரம், 14 வது வார்டில் கிளைச் செயலாளர் கே.ராஜேந்திரன் தலைமையில் முன்னாள் மாவட்டப் பிரதிநிதி ந.ப.மனோகரன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.எல்.பி.கோபிநாத், என்.ராஜசேகரன், மேஸ்திரி என்.ராஜேந்திரன், ஆர்.சலீம் கான், எம்.தஸ்தஜிர், எம்.டேவிட் ராஜன், டி.ஹரிதாஸ், கே.சரவணன், எம்.அபி, கோவிந்தாபுரம் சீதாராமன், பூதேரி எஸ்.பாஸ்கர், பி.கமலக்கண்ணன், காமராஜ், டேவிட் ராஜ், நடராஜன், இதயதுல்லா, ஆர்.விவேகானந்தன், தங்கவேல், சாரம் தயாளன், வி.அருணாச்சலம் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.



சூலூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, கழக வேட்பாளர், கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் சூலூரில் தனது பிரச்சாரத்தை நிறைவு செய்தார். இதில் கழக நெசவாளர் அணி துணை செயலாளர், தொகுதி பார்வையாளர் சிந்து ரவிச்சந்திரன் உள்பட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.